# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண். 314 நாள்: 21.07.2026

### பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் இன்று (21.07.2026) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

**வடக்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள் ஆய்வு:**

வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி, மாதவரம் மண்டலம், வார்டு-26க்குட்பட்ட பகுதியில் உள்ள அம்மா உணவகம், வார்டு-25க்குட்பட்ட ஜிஎன்டி சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மைப் பணி, வார்டு-28க்குட்பட்ட கே.கே.ஆர். பூங்கா, வார்டு-23க்குட்பட்ட எம்.ஆர்.எச். சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி உள்ளிட்ட பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், தண்டையார்பேட்டை மண்டலம், வார்டு-36க்குட்பட்ட சர்மா நகரில் உள்ள பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், அப்பகுதியில் உள்ள வண்டல் வடிகட்டி தொட்டி, வார்டு-35க்குட்பட்ட ஜி.என்.டி. சாலையில் உள்ள கேப்டன் காட்டன் கால்வாயில் ரோபோடிக் எக்ஸ்கவேட்டர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணி, கால்வாயின் மறுபகுதியில் தேங்கியுள்ள குப்பைக் கழிவுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, குப்பைக் கழிவுகளை உடனடியாக அகற்றிட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள் ஆய்வு:**

மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-119க்குட்பட்ட முசிறி சுப்பிரமணியம் சாலையில் உள்ள அம்மா உணவகம், முசிறி சுப்பிரமணியம் சாலையில் உள்ள வண்டல் வடிகட்டி தொட்டியில் உள்ள வண்டல் மண் அகற்றும் பணி, டாக்டர் க்ரெசண்ட் சாலையில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற சமுதாய நல மையத்தின் கட்டுமானப் பணி, அம்மையப்பன் சந்துப் பகுதியில் கட்டப்பட்டு வரும் சமுதாய கூடம் கட்டுமானப் பணி, வார்டு-120க்குட்பட்ட கிருஷ்ணமாபேட் மயானபூமி உள்பகுதியில் கட்டப்பட்டு வரும் கோசாலை கட்டுமானப் பணி, கிருஷ்ணமாபேட் மயானபூமியில் பசுமைப் பரப்பினை அதிகரிக்கும் வகையில் மரக்கன்றுகள் நடும் பணி, வார்டு-109க்குட்பட்ட டிரஸ்ட்புரம் கால்வாயில் நடைபெற்று வரும் மேம்பாட்டுப் பணி,

வார்டு-113க்குட்பட்ட மாம்பலம் நெடுஞ்சாலையில் மேற்கொள்ளப்படவுள்ள மழைநீர் வடிகால் அமைக்கும் இடத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**தெற்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள் ஆய்வு:**

தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலம், வார்டு-185க்குட்பட்ட வீராங்கால் ஓடையில் ரோபோடிக் எக்ஸ்கவேட்டர் (Robotic Excavator) மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணி, வார்டு-188க்குட்பட்ட வேளச்சேரி தாம்பரம் பிரதான சாலையில் கட்டப்பட்டு வரும் முதல்வர் படைப்பகம் கட்டுமானப் பணி உள்ளிட்ட பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது, மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**